செய்தி வெளியீடு எண்:854 நாள்:13.10.2008

<u>செய்தி வெளியீடு</u>

**பொது விநியோகத் திட்டத்தில் தரமான பொருட்களே வழங்கப்பட வேண்டும். தரக்கட்டுப்பாட்டு அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்பினை தொடங்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் அறிவுரை**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தரக் கட்டுப்பாட்டு அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்பினை சென்னையில் மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் இன்று (13.10.2008) காலை 10.00 மணிக்கு தொடங்கி வைத்து உரையாற்றினார்கள்.

தரக் கட்டுப்பாட்டு அலுவலர்கள் பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் பொருட்கள், கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் மற்றும் மக்களுக்கு வழங்கப்படும் சேவை தரமுடன் இருக்க முழு முயற்சி மேற்கொள்ள வேண்டும். பொது மக்களின் மன நிறைவு அடையும் வகையில் பணியாற்றி பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் பொருட்கள், குறிப்பாக அரிசியின் தரத்தை உயர்த்த தொடர்ந்து முனைப்பான முயற்சிகள் எடுக்க வேண்டும். தர ஆய்வாளர்கள் பயன்படுத்தும் ஈரப்பத மானியை அடிக்கடி சோதனை செய்து தரமாக உள்ளதா என்பதை பார்க்க வேண்டும். விவசாயிகள் கொண்டுவரும் நெல்லின் ஈரப்பதத்தினை சரியாக கண்டறிந்து அவர்கள் குறை கூறாத அளவிற்கு நெல் கொள்முதல் செய்ய வேண்டும். கொள்முதல் செய்யப்படும் நெல்லினை ஈரப்பதத்தின் அடிப்படையில் அரவைக்கு அனுப்பி தரம் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஈரப்பதம் அதிகமாக உள்ள நெல்லை கொள்முதல் செய்து அரவைக்காக நவீன அரிசி ஆலைகளுக்கு அனுப்பப்படுவதால் அரிசியில் கண்டுமுதல் (Outturn) குறைவு ஏற்படுகிறது. இதனை தவிர்க்க வேண்டும். கிடங்குகள் மற்றும் திறந்த வெளி சேமிப்புக் கிடங்குகளில் சேமித்து வைக்கப்படும் அரிசி மற்றும் அனைத்து பொருட்களிலும் பூச்சித் தாக்குதல் உள்ளதா என்பதை 15 நாட்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்ய வேண்டும். சத்துணவு மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்கு கொள்முதல் செய்யப்படும் துவரம் பருப்பு, உளுந்து, ரவை, மைதா, ஆட்டா ஆகிய பொருட்களின் தரத்தினை ஆய்வு செய்து தரமான பொருட்கள் தான் பொது மக்களுக்கு சென்றடைகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் பொருட்களில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் உடனடியாக அதனை மாற்றி தரமுடைய பொருட்களை வழங்க வேண்டும். தரமற்ற பொருட்கள் வழங்கப்பட்டால் உரிய நபர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். விரைவில் கெடக்கூடிய ரவா, மைதா, ஆட்டா போன்ற பொருட்களை கிடங்குகளில் நீண்ட நாட்களுக்கு இருப்பு வைக்கக்கூடாது. உடனுக்குடன் கடைகளுக்கு அனுப்பப்பட்டு விற்பனை செய்ய வேண்டும். கிடங்குகள் முறையாக பராமரிக்கப்படவில்லையென்றால் தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். பொது விநியோகத் திட்டத்தில் தரமான பொருட்கள் விநியோகம் செய்யப்படவும், பொது மக்கள் ஆரோக்கியமாக வாழவும், தரக் கட்டுப்பாட்டு அலுவலர்கள் முனைப்புடன் பணியாற்ற வேண்டும். கடத்தல் அரிசி கைப்பற்றப்பட்டு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளுக்கு அனுப்பப்பட்டவுடன் உடனடியாக தரச்சான்று அளிக்கப்பட வேண்டும். காலந்தாழ்த்தி குற்றவாளிகளை தப்பிவிட காரணமாக இருந்துவிடக் கூடாது என்றும் தெரிவித்தார்கள்.

பயிற்சி வகுப்பில் திரு. க.சண்முகம், இ.ஆ.ப., அரசு செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. க. இராஜாராமன், இ.ஆ.ப., ஆணையாளர், உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. சத்யப்ரதா சாகு, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஆகியோர் பங்குபெற்று பயிற்சியாளர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கினார்கள்.

மேற்கண்ட பயிற்சி வகுப்பில் தரக்கட்டுப்பாட்டு அலுவலர்களுக்கு முனைவர் சிங்காரவடிவேல், முதன்மை விஞ்ஞானி, நெல் பதனிடுதல் மற்றும் ஆராய்ச்சி மையம், தஞ்சாவூர் மற்றும் முனைவர் எம்.எல்.என். மூர்த்தி, உதவி மண்டல இயக்குநர், இந்திய தானிய சேமிப்பு பயிற்சி மையம், ஹைதராபாத் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

*************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9